# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.67/2017

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுரேஷ் குமார் | மதம் | : |
| த/பெ | : மூர்த்தி | ஜாதி | : |
| வயது | : | கிராமம் | : |
| தொழில் | : | வட்டம் | : |

**30.08.2024**

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா சொத்தை தப்பாக விற்றுள்ளார். எனவே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை விற்பனை செய்தபோது நானும் என் அப்பாவும் ஒன்றாக தான் இருந்தோம் என்றால் சரிதான். ஆனால் சொத்தை விற்றது எனக்கு தெரியாது. என் அப்பா விற்பனை செய்த ஆவணத்தில் எனது கல்வி மற்றும் பராமரிப்பு செலவுக்காகத்தான் விற்பனை செய்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அவ்வளவு செய்ய வேண்டிய வாய்ப்பு இல்லை. நான் 10ம் வகுப்பு அரசு பள்ளியில் படித்து தேர்ச்சி பெறவில்லை.

2. குப்பம்மாள் யார் என்றால் என் பாட்டி ஆவார். குப்பம்மாள் எனக்கு உயில் எழுதி வைத்த தேதி சொல்ல முடியுமா என்றால் 1994ம் வருடம் ஆகும். மாதம், தேதி ஞாபகமில்லை. குப்பம்மாள் எப்போது இறந்தார் என்றால் 1996ல் இறந்தார். மாதம், தேதி ஞாபகமில்லை. குப்பம்மாள் இறந்த பின்பு உயில்படி என் பெயருக்கு பட்டா மாற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனக்கு சிறு வயது என்பதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அப்போது எனக்கு 10 வயதுதான்.

3. நான் உரிய வயதான 18 வயது அடைந்த பின்பாவது என் பெயருக்கு பட்டா மாற்ற ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. உயில்

எழுதிய தேதியில் இருந்து கடந்த 22 வருடமாக பட்டா மாற்ற நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரிதான். 1994ல் எழுதப்பட்ட உயிலை பொறுத்து நடைமுறைபடுத்த நான் பட்டா மாற்றாததால் உயில் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எனது அனுபவத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்று தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. சொத்திற்கு விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் சொத்து என்னுடையதுதான் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தவறாக சொல்கிறேன் என்றாலும் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்து கட்டளை மற்றும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. நான் தாவா சொத்தை அனுபவிப்பதை காட்ட ஏதேனும் வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் பெயரில் அவ்வாறு பட்டா, சிட்டா ரசீது எதுவும் இல்லை என்றால் சரிதான். என் பாட்டி பெயரில் உள்ளது.

5. என் பெயரில் பட்டா, சிட்டா எதுவும் இல்லாததால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து 2001ல் வாங்கியதில் இருந்து 2, 3 பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் 2, 3 பிரதிவாதிகள் பெயரில்தான் பட்டா, சிட்டா உள்ளது என்றாலும் சரியல்ல. சொத்துக்கு நான்தான் உரிமையாளர். மூர்த்தி இல்லை.

6. 2011ல் 3ம் பிரதிவாதி மீது நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் மீது நடவடிக்கை எடுத்து திருத்தணி காவல் துறையினர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த முதல் தகவல் அறிக்கையா என்றால் எனக்கு தெரியவில்லை. அதன்பிறகு மேற்படி முதல் தகவல் அறிக்கையின் பேரில் CC No.205/2011 என வழக்கு நடந்தது என்றால் சரிதான். என் அப்பா கொடுத்த கிரையம் செல்லாது என்றும் சொத்தை திருப்பி ஒப்படைக்க கோரியும்தான் நான் காவல் துறையில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

7. அந்த குற்ற வழக்கு விசாரணை செய்து என்ன ஆனது என்று தெரியுமா என்றால் என்ன ஆனது என்று தெரியாது. மேற்படி CC No.205/2011 வழக்கு திருத்தணி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் 11.02.2014 ல் குற்றம் நிரூபணம் செய்யப்படவில்லை என விடுதலை ஆனது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. என் அப்பா கிரையம் செய்த விவரம் 2011 லேயே எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2011 ல் எனக்கு மேற்படி கிரையம் பற்றிய விவரம் தெரிந்த நிலையில் 2014 க்குள் நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கை எப்போது வேண்டுமானாலும் தாக்கல் செய்யலாம்.

8. உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாததால் காலவறையறை சட்டத்தின்படி இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. காலவதியாகிவிட்டதால் நான் கிரைய ஆவணத்தை ரத்து செய்ய கோர முடியாது என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்த சொத்திற்கான புல எண் என்ன என்றால் ஞாபகமில்லை. நான் வழக்கு தாக்கல் செய்த சொத்திற்கான விஸ்தீரணம் என்ன என்றால் 15 குழியாகும். 15 குழி என்பது 1 ஏக்கர் ஆகும். நான் வழக்கு தாக்கல் செய்த சொத்திற்கான நான்குமால் என்ன என்றால் தெரியாது.

9. கிரையம் வாங்கிய தேதி முதல் பிரதிவாதிகள்தான் சொத்தை ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)